**Starting time 12.16 P.M.**

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No. 33/2021**

Deposition of **P.W. 1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 02.03.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்லப்பிள்ளை | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : எந்த சர்வே எண்ணில் உள்ள சொத்துக்கு திருத்தம் செய்ய வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சர்வே எண் 99/3B2 ஆகும். தாவா சொத்துக்கான வில்லங்க சான்றான வா.சா.ஆ.9-ல், தாவா சொத்தைக் கிரயம் செய்ததாகச் சொல்லும் பதிவை நீக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான். வா.சா.ஆ.11 கிரயப் பத்திரத்தில் உள்ள கிரயம் செய்தவர்களையோ, கிரயம் பெற்றவர்களையோ நான் இவ்வழக்கில் தரப்பினராகச் சேர்த்துள்ளேனா என்றால், அவர்கள் கிரயம் பெற்ற சொத்துக்கும், எங்களுக்குச் சொந்தமான சொத்துக்கும் சம்பந்தம் இல்லை, அவர்கள் எங்கள் அனுபவத்திற்கு இடையூறும் செய்யவில்லை. எனவே, அவர்களை தரப்பினர்களாகச் சேர்க்கவில்லை.

2. நான் கெங்கவல்லி சார்பதிவாளரிடம் சென்று வில்லங்க சான்றில் தாவா சொத்தைப் பொறுத்து பதிவு தவறாக வருகிறது என்றும், அதை நீக்க வேண்டி மனு எதுவும் கொடுத்தேனா என்றால், கொடுத்தேன். அம்மனுவின் நகலை இவ்வழக்கில்

தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான் அத்தியாவசிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்காததால், இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time : 12.25 P.M.

**ஒப்பம்/- ஜி.யுவராஜ்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**